ஊடக வெளியீடு
Press Release
මාධ්‍ය නිවේදනය
வடக்கு மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு
Northern Province Governor's Media Division
උතුරු පළාත් ආණ්ඩුකාර මාධ්‍ය අංශය
Governor's Secretariat, Northern Province, Old park, Chundukkuli, Jaffna, Sri Lanka

ஊடக அறிக்கை இல: 25/12/31

வடக்கு மாகாண பொதுச்சேவையின் கீழ் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாகாண அலுவலகப் பணியாளர் சேவை (தரம் - III)

வடக்கு மாகாண பொதுச்சேவையின், மாகாண அலுவலகப் பணியாளர் சேவையின் தரம் III இற்கான வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படவுள்ளன.

பதவி: மாகாண அலுவலகப் பணியாளர் (தரம் III)
ஆட்சேர்ப்பு முறை: திறந்த போட்டிப் பரீட்சை
விண்ணப்ப முடிவுத் திகதி: 2026.01.05

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள துணை மருத்துவ சேவைப் பதவிகள் (ஒப்பந்த அடிப்படை)

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள அரச மருத்துவமனைகளில் நிலவும் பின்வரும் துணை மருத்துவ சேவை பதவிகளுக்கான வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில், நேர்முகப்பரீட்சை மூலம் நிரப்பப்படவுள்ளன.

கோரப்பட்டுள்ள பதவிகள்:
மருந்துக் கலவையாளர் (Dispenser),
இருதய துடிப்புப் பதிவாளர் (ECG Recordist),
மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (MLT),
மருந்தாளர் (Pharmacist),
பௌதீக சிகிச்சையாளர் (Physiotherapist),
கதிர்ப்படப்பிடிப்பாளர் (Radiographer)

ஆட்சேர்ப்பு முறை: நேர்முகப்பரீட்சை
விண்ணப்ப முடிவுத் திகதி: 2025.12.31

Tel :+94-21-2219375/76 mail : npgovmedia@gmail.com FB & Youtube : Governor's Office Northern Province

மேற்கூறிய இரண்டு பதவிகளுக்குமான முழுமையான வர்த்தமானி அறிவித்தல், தகைமைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை வடக்கு மாகாண இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

இணையத்தள முகவரி: www.np.gov.lk

செல்ல வேண்டிய வழிமுறை: www.np.gov.lk - Exams and Recruitments - Advertisement - 2025

தகைமையுடைய விண்ணப்பதாரர்கள், விளம்பரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, குறிப்பிடப்பட்ட இறுதித் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.சிறீ கோரியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு
16.12.2025